முருகப்பெருமான் துணை

# உலகத்தை அச்சுறுத்தும் நச்சுகிருமிகளை கட்டுப்படுத்த ஆசி அறிவுரை நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

13.04.2021, செவ்வாய்க்கிழமை

1. அருளமுது தந்தருளும் அரங்கா வாழ்க
அருமருந்தாய் நின்றுகாக்கும் தேசிகா வாழ்க
தருமபலம் கொண்டநல் குருராஜா வாழ்க
தவசியே வாழும் ஞானியே வாழ்க வாழ்க
2. வாழ்கயென வாழ்த்தி சுப்ரமணியப்பெருமான் யானும்
வாட்டும் நச்சுக்கிருமி அல்லலை கட்டுப்படுத்த
தாழ்விலா அறிவுரை ஆசிதன்னை
தவராசன் கேட்க சார்வரி ஆண்டின் கடைநாளில் உரைப்பேன்
3. உரைக்கவே கலியின் கொடுமைதானே
உலகோரின் எதிர்மறை செயல்களாகி
கறைகள் படிய பேரிடர் காலமாகி
கண்டதே மக்களின் அழிவாக நச்சுக்கிருமி அல்லல்
4. அல்லலும் மக்களின் தீவினையால் தான்
அச்சுறுத்தும்படி பெருகி நிற்குதப்பா
பொல்லாங்கும் வஞ்சம் பகை அபகரிப்பும்
பொது நிதியென்றும் கருதா கையாடல் ஊழலும்
5. ஊழலும் உயர்வில்லாத பதவி மோகமும்
உலகை காக்கத் தவறிய தலைமையும்
கலகம் செய்தே வாழக்கூடிய கழகங்களும்
கன்னிகைக்கு பாதுகாப்பில்லாத வன்கொடுமைகளும்
6. கொடுமைகளும் சிறார்என்றும் கருதாத
கொலைபாவ செயல்களும் பெருகி நின்றதாலே
இடராக நச்சுக்கிருமி வளர்ந்துமே
இன்னும் முடிவுகாணா அச்சுறுத்தி வருகுதப்பா
7. அப்பனே கலி முடிவின் பின்பகுதி இது
அழிவை நிறையத் தந்தே அகலநேரும்
காப்பு வேண்டி விரும்பும் மக்கள்
கட்டாயம் சுத்தசைவ நெறிக்கு வரவேண்டும்
8. வேண்டியே ஞானிகளை பூஜை செய்துகொண்டு
விடாது தர்மத்தை செய்ய வேண்டும்
தொண்டுள்ளமாக மக்கள் மனநிலைகள்
துறைவாரியாக அதிகாரிகளும் மாறினால்தான்
9. மாறினால்தான் நச்சுக்கிருமி வழி துன்பம்
மக்களை விட்டு முடிவு காணும்
கூறிட இந்த தர்மசிந்தை நோக்கம்
கொள்கைதனில் ஜீவகாருண்யம் வரவில்லை என்றால்

10. வரவில்லை என்றால் இன்னும் உபய ஆண்டிற்கு
வாட்டி வதைக்கும் நச்சுக்கிருமி அல்லல்
அரசுகள் எந்த மருந்துகள் கண்டுபிடித்தாலும்
அச்சுறுத்தலை கட்டுப்படுத்த முடியா தவிக்க நேரும்
11. நேர்மையான தர்மவான்கள் படை
நிறைந்த ஆளுமையாக மாறினால் தான்
கிருமிவழி துன்பங்கள் அனைத்தும்
குறைந்து படிப்படியாய் அகல நேரும்
12. நேர்மைபட இந்தத்துன்பங்களில் இருந்து விடுபட
ஞானிகள் பூஜை உலகோர் செய்வதோடு
ஆறுமுக அரங்கன் தர்ம வழியை
அனைவரும் ஏற்று தொடர்ந்து வருக
13. வருகவே பேரிடர் ஒழியும்
வடிவேலன் என்னருளாக மாறி பாதுகாப்பு பெருகும்
தருகின்ற குணம் மக்களிடை பெருக பெருக
தானாக நச்சுக்கிருமி துன்பம் விலகி முடிவு காணும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—